# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S. No.125/2016

2024 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 05 - ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி .A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதிகூறப்படுகிறது.

**நாள் 05.08.2024**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ராஜேஸ்வரி | ஜாதி : | |
| க /பெயர் : | சுந்தரேசன் | மதம் : | |
| கிராமம் : | | தொழில் : | |
| வட்டம் : | | வயது : | |

வா.சா.1 முன்னிலை சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை

1. தாவா சொத்து ரெகுநாதபுரம் கிராமத்தில் அமைந்துள்ள நஞ்சை நிலங்கள் ஆகும். என் மகன் திருகுமரன் பெயரில் 21.03.2007-ல் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தை தான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் பெறும்போது என் மகனுக்கு என்ன வயதிருக்கும் என்றால் சரியாக தெரியவில்லை. என் மகன் கடந்த 2011-ல் இறந்துவிட்டார். அதற்கான இறப்பு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என் மகன் திருமணமாகாமல் இறந்துவிட்டார்.

2. எனக்கு திருகுமரன் தவிர இரண்டு பெண்மகள்கள் உள்ளார்கள். என் இரு மகள்களும் திருகுமரனுக்கு வாரிசுதாரர்கள் என்று கூறி வா.சா.ஆ-3 தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் இருமகள்களையும் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் மகள் சியாமளாவை ஊள்ளூரிலுள்ள தமிழரசன் என்பவருக்கு திருமணம் செய்துகொடுத்துள்ளேன். அவர் அடிக்கடி சிங்கப்பூர் சென்று வருவார் என்றால் சரிதான். என் குடும்பத்திற்கு மகனாக இருந்து என் குடும்பத்தை பார்த்து வருகிறார் என்றால் சரிதான்.

3. தமிழரசன் அம்மா சாந்தி மற்றும் கண்ணன் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அ.வ.எண்.124/2016 உள்ள தாவா சொத்து மற்றும் இவ்வழக்கின் தாவா சொத்து இரண்டிற்கும் ஒரே நான்கெல்லை தான் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் தாவா சொத்தையும் அ.வ.எண்.124/2016 உள்ள தாவா சொத்தையும், சாந்தி மற்றும் கண்ணன் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு சாந்தி என்பவருக்கு வழக்கறிஞர் மூலமாக கடந்த 29.02.2016-ல் அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றாலும் அது என்னால் கொடுக்கப்பட்டது என்றாலும் சரிதான். (**சாட்சியின் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**)

4. இவ்வழக்கறிஞர் அறிவிப்பில் சாந்தி மற்றும் கண்ணன் சாகுபடி செய்வது குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து ஆவணங்கள் பெற்றுக்கொள்வதாக இருந்தால் என்னிடம் மட்டும் தான் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வேறு 3ம் நபர் மூலமாக ஆவணங்கள் ஏற்படுத்திக்கொள்ளக்கூடாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மருமகனைதான் 3ம் நபராக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5. இந்த வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய காலம் முதல் தற்போது வரை நானும், என் மருமகனும் சுமூகமான பேச்சு வார்த்தையில் தான் இருக்கிறோம். என் மருமகனிடம் ஆவணங்கள் ஏற்படுத்துவது தொடர்பாக ஏதேனும் கேட்டேனா என்றால் இல்லை. நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்புக்கு பிரதிவாதி கொடுத்த பதிலறிவிப்பு பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என் தெருவிற்கும், பிரதிவாதிகள் தெருவிற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் நான் மேலத்தெருவிலும், அவர்கள் அக்ரஹாரதெருவிலும் கூப்பிடும் தூரத்தில் தான் இருக்கிறார்கள். நான் நிரந்தரமாக ரெகுநாதபுரம் கிராமத்திலுள்ள குடியானத்தெருவில் வசித்து வருகிறேன்.

6. எனது சம்மந்தி வீடும் பிரதிவாதிகள் வீடும் பக்கக்கத்தில் உள்ளது. என் மகனுக்கு பிறகு என் மருமகன் தான் குடும்பத்திலுள்ள அனைத்து தேவைகளையும் செய்து வருகிறார் என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தது தொடர்பாக

ஏன் வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லாமல் இருந்தற்கு தனிப்பட்ட காரணம் உள்ளதா? என்றால் இல்லை.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

S/d.A.Seethalakshmi,
District Munsif
Mannargudi.